**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 7 ✧ இதழ்-7 ✧ பிப்ரவரி 2025

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# கடனில்லா வாரியமாக மாற்றிட முன் வருக!

**ம**த்திய பட்ஜெட் வருமான வரிவிலக்கை பறைசாற்றுவ தோடு சரி, சாமானிய மக்களுக்கு நலன் பயக்கும் பட்ஜெட் டாகவோ, பாரபட்சமின்றி மாநிலங்களின் நலன்களைப் பேணும் பட்ஜெட்டாகவோ இல்லை என்ற விவாதம் நாடெங்கும் பூதாகரமாக பேசப்பட்டு வருவதை அறிவோம்.

தமிழகத்தில் தேர்தல் வாக்குறுதியை மீறி ஓய்வூதியம் குறித்து முடிவெடுக்க 3 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளதும், ஒப்பந்த தொழிலாளர்களே மின்வாரியத்தில் இல்லை என்ற கூற்றும், ஸ்மார்ட் மீட்டர் திட்டம் மீண்டும் டெண்டர் என்ற நிலையும், அரசின் மீதும், வாரியத்தின் மீதும் நம்பிக்கை தகர்ந்து இருக்கிறது.

நான்கு மாதத்தில் மின்வாரியத் தலைவர் மாற்றப் பட்டிருக்கிறார். புதிய வாரியத் தலைவரை அன்புடன் வரவேற்போம். தேங்கிக் கிடக்கக் கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வருவார் என நம்புவோம்.

காலியிடங்களை பூர்த்தி செய்யாமல் Outsourcing செய்ய முனையும் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய அவசியம் உள்ளது.

ஊர்மாறுதல், பதவி உயர்வுகளில் ஒதுக்கீடு போன்றவைகளில் வாரியத்தின் விதிமுறைகளை மீறும் தன்மை நலம் பயக்காது, அவப்பெயரை ஏற்படுத்திவிடும் என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டு செயலாற்றுவது சரியாக இருக்கும்.

கோடைக் காலத்தை சமாளிக்கும் திறன் மின்சாரம் கொள்முதல் செய்வதில் மட்டுமல்ல, மின்சாரத்தை விநியோகம் செய்வதிலும், தேவையான அளவுக்கு களப்பணியாளர்கள் இருந்திட வேண்டும் என்பதையும் அறிந்திடல் வேண்டும்.

**''காலியிடத்தை நிரப்பிட முன் வரட்டும்,**
**களப்பணி செம்மையாக நடைபெறட்டும்,**
**கடனில்லா வாரியமாக மாற்றிட துணை நிற்போம்.''**

**மார்ச் 8-ல் உலகம் முழுவதும் கொண்டாடப்படும் மகளிர் தினத்தில் பாரதத்தின் தவப்புதல்விகள் யாவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்.**

**- ஆசிரியர்**

# மகளிர் தினம் உண்மை வரலாறு

**- A. மாயாண்டி,** உபதலைவர் TNEBEF விருதுநகர், மார்க்சிய சிந்தனையாளர்

**உலக மகளிர் தினம் எதற்கான நாள்?**

பெண்களுக்கு சமையல் போட்டியும் கோலப்போட்டியும் நடத்துவதற்கான நாள் அல்ல! நகையும், சேலையும் மற்ற பொருட்களும் தள்ளுபடி விலையில் விற்பனை என்று கூவிக்கூவி விற்கும் வணிகத்துக்கான நாள் அல்ல!

இது உழைக்கும் பெண்களும் அவர்களது பிரதிநிதிகளும் நடத்திய உரிமைக்கான போராட்டங்களில் உருவான நாள்!

சோசலிசச் சமுதாயம் படைக்க பெரும் புரட்சிக்கு வழிவகுத்த முன்னோடிப் புரட்சியை உழைக்கும் பெண்கள் தொடங்கி நாள்!

உலக அளவில் இன்றைக்கு பெண்கள் அடைந்துள்ள கணிசமான முன்னேற்றத்துக்கு வழி வகுத்த நாள்!

நடந்த போராட்டங்களை நினைவுகூர்ந்து இனி நடத்த வேண்டிய போராட்டங்களுக்குத் திட்டமிடும் நாள்!

இன்றும் நிலவும் பெண்களின் அவலத்துக்கு முடிவு கட்டச் சூளுரைக்கும் நாள்! சுமார் 125 ஆண்டுகளுக்கு முன் எலினார் மார்க்ஸ் கூறினார்:

**பெண் தொழிலாளியின் நிலைமை என்ன?**

தொழிற்சாலையில் தனது முதலாளிக்காக ஆண்களைவிட அதிக நேரம் வேலை செய்கிறாள். பட்டினியைக் கூடப் போக்காத குறைந்த கூலியைப் பெறுகிறாள். இது போக வீட்டில் தனது முரட்டு எஜமானுக்காக (கணவனுக்காக) வீட்டு வேலைகளையும் கூடுதலாகச் செய்கிறாள். துன்பம் விரக்தி மற்றவர்களைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலை ஆகியவற்றின் அடி ஆழத்தில் வீழ்த்தப்பட்டுக் கிடக்கிறாள் என்றார் எலினார் மார்க்ஸ்.

முதல் முறையாக உலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாடு ஜெர்மனியின் ஸ்டட்கார்ட் நகரில் 17 ஆகஸ்ட் 1907-ஆம் ஆண்டு நடந்தது. தேர்தலில் வாக்களிக்கவும், போட்டியிடவும் பெண்களுக்கு உரிமை கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3 மே 1908-ல் முதல் முறையாக நகர அளவிலான மகளிர் தினம் கூட்டம் அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடந்தது.

முதல் முறையாக தேசிய அளவிலான உலக மகளிர் தினம் ''ஆர்ப்பாட்டம் அமெரிக்காவில் 28 பிப்ரவரி 1909-ல் நடைபெற்றது.

உலக மகளிர் தினம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க தீர்மானம் 26-27 ஆகஸ்ட் 1910-ல் டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகனில் நடைபெற்ற உலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. மார்க்சியரான கிளாரா ஜெட்கின் கேட்டங்கர் மற்றும் தோழர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. 19 மார்ச் 1911-ல் முதல்முறையாக ''உலக மகளிர் தினம்'' ஜெர்மனி, ஆஸ்டரியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டது. 12 மே 1912-ல் ஜெர்மனி, ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டது.

2 மார்ச் 1913 முதல் முறையாக ரஷ்யாவில் உலக மகளிர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. ஜெர்மனி உள்ளிட்ட வேறு சில நாடுகளிலும் இது நடந்தது.

மார்ச் 8 1914ல் ரஷ்யாவில் அடக்கு முறையை மீறி உலக மகளிர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

28 ஜூலை 1914-ல் முதல் உலகப் போர் தொடங்கியது.

1 நவம்பர் 1914-ல் ஒவ்வொரு நாட்டிலும், அந்த அரசுக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் எதிராக ஆயுதங்களைத் திருப்ப வேண்டும் என்று லெனின் அறை கூவல் விடுத்தார். ஆனால், பல நாடுகளில் சோசலிஸ்டுகள் எனப்படுகிறவர்கள் தேசியவாதத்திற்கு இரையானார்கள்.

மார்ச்-7 1915ல் சுவிட்சர்லாந்து நாட்டில் உலக மகளிர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. 26-28 மார்ச் 1915-ல் சுவிட்சர்லாந்தில் உலக பெண்கள் மாநாடு நடைபெற்றது. போர் வேண்டாம் - சமாதானம் வேண்டும் என்று கோரி இயக்கம் நடத்துமாறு பெண்களுக்கு அறைகூவல் விடுத்தது.

''சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும் சோற்றுக்கோ வந்ததிந்த பஞ்சம்'' என்று பாடினான் பாரதி.

அதைப் போல் ஒரு ரொட்டித்துண்டு கூடக் கிடைக்காமல் தானும், குழந்தைகளும் மற்றவர்களும் பசியால் துடிப்பதை இனியும் பொறுக்க முடியாது என்று பெண் தொழிலாளர்கள் கொதித்தெழுந்தார்கள். ரஷ்யத் தலைநகர் பெட்ரோ கிராடில் அங்கு தொழிற்சாலைகள் நிறைந்த வைபோர்க் பகுதியில் துணி ஆலைகளில் வேலை செய்த பெண் தொழிலாளிகள் 1917 மார்ச் 8 மகளிர் தினத்தன்று வேலை நிறுத்தம் செய்து போராட்டத்தை துவங்கினார்கள்.

பேரணியாகத் தொடங்கி புரட்சியாக வெடித்தது. பல்வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண் ஆண் தொழிலாளர்கள் சிகரெட் ஆலையில் பணிபுரிந்த அனைத்து பெண் தொழிலாளர்களும் பேரணியில் பங்கேற்றனர்.

வீட்டிலிருந்த பெண்கள் படைவீரர்களின் மனைவிகள் பேரணியின் ஆவேசத்தால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் அலுவலக ஊழியர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டனர்.

பல சிற்றாறுகள் கலந்து கலந்து பொங்கிப் பெருகும் பேராற்று வெள்ளம் போல் மனித வெள்ளம் முதன்மைச் சாலையை நிறைத்தது.

இந்தப் பேரணியில் 1 லட்சத்து 28 ஆயிரம் பெண், ஆண் தொழிலாளர்கள், படைவீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

மறுநாள் 2 லட்சத்தை தாண்டியது.

''மன்னராட்சி ஒழிக'' என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. ஆம் புரட்சி தொடங்கிவிட்டது. மார்ச் 15 அன்று பத்து அமைச்சர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை நாடாளுமன்ற இடைக்கால குழு அமைத்தது.

அன்று இரவே ஜார் மன்னர் பதவி துறப்பதற்காக அறிக்கை எழுதி மறுநாள் மார்ச் 16 அன்று இடைக்கால அரசாங்கத்திடம் அளித்தார். வீழ்ந்தது மன்னராட்சி!

புரட்சி தொடங்கிய மார்ச் 8 என்பது ரஷ்யாவின் பழைய காலண்டர்படி பிப்ரவரி 23 என்பதால் இது ''பிப்ரவரி புரட்சி'' என்று வரலாற்றில் புகழ்பெற்றது.

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில், கடைக்கண் வைத்தாள் அங்கே ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி! கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்! என்று அதை வரவேற்று பாடினார் பாரதி!

தொழிலாளி வர்க்கப் பெண்கள்தான் அந்த யுகப் புரட்சியைத் தொடங்கினார்கள் என்பதால் அப்படிப் பாடியிருப்பாரோ!

இவ்வாறு 1917 மார்ச் 8ல் ரஷ்யாவில் பெண்கள் தொடங்கிய பெரும் புரட்சி தான் உலக மகளிர் தினம் மார்ச் 8-ல் கொண்டாடப்படுவதற்கு உண்மையான மூலக்காணம் (Real origin) ஆகும்.

முடியாட்சி வீழ்ந்தது குடியாட்சி என்ன செய்தது?

மேலோட்டமான கோரிக்கைகளை அமுல்படுத்துவதாகச் சொல்லிவிட்டு முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றாததால் அதிருப்தி அடைந்த பெண், ஆண் தொழிலாளர்கள், விவசாயிகள், படை வீரர்கள், மாணவர்கள் உழைக்கும் மக்கள் அனைவரும் கொந்தளிப்பில் இருந்தனர்.

தலைமறைவாக வெளிநாடுகளில் இருந்த லெனின் தாயகம் திரும்பினார்.

1917 நவம்பர் 7 அதிகாலை 1.25 மணிக்கு தொடங்கி மறுநாள் நவம்பர் 8 அதிகாலை 3.40 மணிக்கு புரட்சி முடிந்தது அனைத்து அரசு அலுவலங்களையும் சோவியத்துகள் கைப்பற்றினார்கள். இடைக்கால அமைச்சரவையில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு துப்பாக்கி கூட சுடப்படவில்லை. ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்தவில்லை. நாடு முழுவதும் இருந்து வந்திருந்த சோவியத் பிரதிநிதிகளின் மாநாட்டில் லெனினுடைய தீர்மானம் முன் வைக்கப்பட்டது அரசு அதிகாரங்கள் அனைத்தையும் அந்த மாநாடு ஏற்கிறது என்ற அந்த தீர்மானம் ஏற்கப்பட்டது.

சோசலிச ரஷ்யாவின் வெற்றிப் பயணம் தொடங்கியது.

முதல் சட்டமாக போர் வேண்டாம். நியாயமான சமாதானத்துக்குத் தயார் என்ற சட்டத்தை மாநாடு நிறைவேற்றியது.

இரண்டாவது சட்டம் ‘‘அனைத்து நிலங்களும் அரசுக்கே சொந்தம்!’’ என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆண்-பெண் வேறுபாடில்லாமல் சமவேலைக்கு சமஊதியம் வேலை பெறும் உரிமை உள்ளிட்ட ஆண்-பெண் சமத்துவம் உறுதி செய்யப்பட்டது.

தாய்மையுற்ற பெண் தொழிலாளிக்கு மகப்பேறுக்கு முன்னும் பின்னும் சம்பளத்துடன் இரண்டு மாத விடுமுறை.

குழந்தை பராமரிப்பதற்கு வேலை நேரத்திற்கு இடையே ஓய்வு நேரங்கள் தொழிற்சாலையில் அதற்கென ஓய்வறைகள் ஏற்படுத்தப்பட்டன.

திருமணம் விவகாரத்திலிருந்து மதம் விலக்கி வைக்கப்பட்டது. பல்வேறு பெண்ணுரிமைச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. (இவையெல்லாம் உலகிலேயே சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே முதன் முதலில் நிறைவேற்றப்பட்டது என்பதை மறந்துவிடாதீர்கள்!

1920ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவில் மார்ச் 8 உலக மகளிர் தினம் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

உலக பெண்கள் அகிலத்தின் இரண்டாம் மாநாடு 1921-ஆம் ஆண்டு 9-15 தேதிகளில் மாஸ்கோவில் நடைபெற்றது. கிளாரா ஜெட்கின் செயலாளராக பொறுப்பேற்றார் மார்ச் 8ஐ உலக மகளிர் தினமாக நிச்சயித்தது இந்த மாநாடுதான்.

**பெண்ணியப்புயல்**

இரண்டாம் உலக போர் 1945ஆம் ஆண்டுகளில் முடிவடைந்த பின் பல ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் ஆட்சி ஏற்பட்டது. சமூக மாற்றத்திற்கான பயணம் தொடங்கியது. அந்த நாடுகளிலும் மார்ச்-8 உலக மகளிர் தினம் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

இந்த சூழலில்தான் பெண்ணியம் (Feminism) என்ற இயக்கம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் புயல் போல் எழுந்து வீசி அடித்தது.

**பெண்ணியம் என்றால் என்ன?**

ஆணும் பெண்ணும் சமம் என்பதே பெண்ணியம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலியல் தவிர மற்ற வேறுபாடு எதுவும் இல்லை.

ஆணாதிக்கம் உள்ளிட்ட அனைத்து ஆதிக்கங்களும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே பெண்ணியம்.

அமெரிக்காவின் அட்லாண்டிக் நகரில் 1968 செப்டம்பர் 7ல் அமெரிக்க அழகி போட்டி நடைபெற்றது. நியூயார்க் முற்போக்குப் பெண்கள் என்ற அமைப்பு இதை எதிர்த்து அங்கு போராட்டம் நடத்தியது.

அப்போது பெண்கள் தமது உள்ளாடைகளை எரித்ததாக (Bra burning) தவறாக கூறப்படுகிறது. அவ்வாறு எரிக்கப்படவில்லை. ஆனால், உள்ளாடைகளையும், துடைப்பான்களையும், ஆபாசப் பத்திரிக்கைகளையும் குப்பைத் தொட்டியில் போட்டுப் போராட்டம் நடத்தினார்கள்.

1945 டிசம்பர் 1 அன்று, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தால் உலக மகளிர் சம்மேளனம் (Women's International Democratic Federation - WIDF) நிறுவப்பட்டு இன்றும் துடிப்புடன் செயல்பட்டு வருகின்றது.

ஐ.நா. மன்றத்தின் பொதுசெயலாளருக்கு 1972 பிப்ரவரியில் 3ல் ஆஸ்திரேலிய பெண்கள் சங்கத் தலைவரும், ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினருமான பிரிட்டோ மகளிர் சாதனம், ஆண்டு குறித்து கடிதம் எழுதினார்.

மகளிர் சம்மேளனத்தின் தலைவர் ஹெர்ட்டா இவர் பின்லாந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர். ஐ.நா. மன்றத்தில் பெண்கள் சம்மேளனத்தின் சார்பில் அதிகாரப்பூர்வ பார்வையாளர் பொறுப்பிலிருந்தார்.

இந்த ஹெர்ட்டாதான் பெண்கள் தொடர்பான ஐ.நா. மன்றத்தின் அணுகுமுறையிலும், செயல்பாட்டிலும் ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியவர். அவரது முன் முயற்சிகள் செயல்பாடுகளின் காரணமாகத்தான் ஐ.நா. மன்றமே 1975 மார்ச் 8ம் தேதியன்று முதல் முறையாக உலக மகளிர் தினத்தை கொண்டாடியது.

இவற்றின் தொடர்ச்சியாகத்தான் உலக மகளிர் தினத்தை அனைத்து நாட்டு அரசுகளும் கொண்டாட வேண்டும் என்று கேட்டு கொள்ளும் தீர்மானத்தை ஐ.நா பொதுமன்றம் 1977 டிசம்பர் 16 அன்று நிறைவேற்றியது.

ஐ.நா. மன்றத்தின் வேண்டுகோளின்படி இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் மார்ச் 8ம் தேதியை உலக மகளிர் தினமாக அங்கீகரித்தன.

ஐ.நா மன்றமே மார்ச் 8 அன்று மகளிர் தினத்தை கொண்டாடவும், அனைத்து நாடுகளும் உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றவும் முன் முயற்சிகளை மேற்கொண்டு வழி வகுத்ததும் கம்யூனிஸ்ட் பெண்கள் இயக்கமே. இப்படிச் சொல்வதால் உலக மகளிர் தினத்தின் பெருமை முழுவதும் கம்யூனிஸ்ட் பெண்கள் இயக்கத்திற்கு மட்டுமே உண்டு என்று அர்த்தம் இல்லை.

கம்யூனிஸ்ட் அல்லாத பெண்கள் பெண் அமைப்புகள் அரசியல் அமைப்புகள் ஐ.நா. மன்றம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஆகியவற்றுக்கும் இந்த பெருமையில் பங்கு உண்டு. எனினும் தலையாய பங்கும் நிர்ணயகரமான பங்கும் (Foremost, and decisive role) கம்யூனிஸ்ட் பெண்கள் இயக்கத்திற்கே உரியது.

**''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்'' என்று அறைகூவல் விடுக்கும் நாள்!**

**தனியுடைமை ஒழித்துப் பொதுஉடமைச் சமுதாயம் படைக்க வழிவகுத்த பெரும் புரட்சியைப் பெண்கள் தொடங்கி வைத்த நாள்! அதை தொடர்ந்து நடத்த சூளுரைக்கும் நாள்.**

**மின்துறையில் இழந்த உரிமைகளை மீட்டெடுக்க சபதமேற்கும் நாள்!**
**மின்துறையில் பணியாற்றும் சகோதரிகளே எழுக! எழுக! தோழர்களே!**

# கோவையில் மாநில இணை செயலாளர் திரு. P. நாகராஜ் உ.செ.பொ மின்வாரிய பணி நிறைவு - பாராட்டு விழா

தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில இணைச் செயலாளர் திரு. ப. நாகராஜன், M.E., அவர்கள் மின்சார வாரியத்தில் 37 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி கடந்த 31.01.2025 அன்று உதவி செயற்பொறியாளராக பணி ஓய்வு பெற்றார்.

திரு. ப. நாகராஜன், உதவி செயற்பொறியாளர் / நகரம்/ சோமனூர் மாநில இணை செயலாளர் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 31.05.2025 அன்று மாலை சோமனூரில் செல்வ விநாயகர் திருமண மண்டபத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. பணி நிறைவு பாராட்டு விழா மதிப்பிற்குரிய மேற்பார்வை பொறியாளர் / தெற்கு / கோவை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்தாய் வாழ்த்துடன் துவங்கிய சீர்மிகு விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் திரு. த. மருதாசலம், உதவி செயற்பொறியாளர் - வடக்கு - சோமனூர் அவர்கள் வரவேற்று பேசினார்.

''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கிற்கேற்ப அனைவரிடமும் நட்புடனும், மகிழ்வுடனும் பழகுவதே இவரது சிறப்பம்சமாகும்!

ஊர் கூடி இழுத்தால் தான் தேர் என்று சொல்வார்கள். ஆனால், அந்த ஊரை கூட்டுவதற்கும், திரட்டுவதற்கும் ஒரு தனித்துவமான தலைமைத்துவம் வேண்டும். அத்தகைய தலைமைத்துவத்தை தனக்கென தக்க வைத்துக் கொண்டவர் தான் நமது திரு. ப. நாகராஜன், அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை அவரின் பணி நிறைவு பாராட்டு விழா நிரூபித்தது.

இவர் இந்த பணி காலத்தில் அன்புக்கு அழகு சேர்த்து, பண்புக்கு பலம் சேர்த்து, வீரத்தில் வீறுகொண்டு, நீதிக்கு தலை வணங்கி, உயர்வின் உச்சியில் தனக்கென்று ஒரு தன்னிகரற்ற இடத்தை பிடித்துள்ளார் என்பதே நிதர்சனமான உண்மை.

தனது இத்தனைக் கால வாரியப் பணியில், இவர் பதவி, பெயர், புகழ் அனைத்தையும் சம்பாதித்ததோடு சேர்த்து பலரின் அன்பையும், நன்றியையும் சம்பாதித்துள்ளார்.

UTUCயின் அகில இந்திய செயலாளர்களில் ஒருவரும், UTUCயின் தமிழ் மாநில பொது செயலாளர் மற்றும் TNEB Employees Federation-ன் மாநில பொதுச்செயலாளர், திரு. அ. சேக்கிழார் அவர்கள் சோமனூர் கோட்டத்திற்கு வருகை தந்து வாழ்த்தி பேசி சிறப்பித்தார்.

சோமனூர் கோட்ட செயற்பொறியாளர், திரு. K.R. சபரிராஜன் குனியமுத்தூர் செயற்பொறியாளர், திரு. சு. சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

கோவை / தெற்கு வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் / பொறிஞர். திரு. ம. சுப்பிரமணியன் அவர்கள் தனது தலைமை உரையில் பல்வேறு சிறுகதைகளை உதாரணமாக கூறி, அந்த கதையில் வரும் ஒன்றை நீதி கருத்தினை ஓய்வு பெற்ற பொறிஞர் ப. நாகராஜன் அவர்களின் வாரிய நடத்தையோடு ஒப்பீடு செய்து பேசியது மட்டுமல்ல, நிகழ்ச்சி முடியும் வரையிலும் கலந்து கொண்டு சிறப்பித்தது நமது பொறியாளரின் மாண்பினை போற்றும்விதமாக அமைத்து இருந்தது.

சோமனூர் கோட்ட செயற்பொறியாளர் தனது வாழ்த்துரையில், சோமனூர் கோட்டத்தில் முடிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களில் திரு. P. நாகராஜ் உதவி செயற் பொறியாளரின் பங்களிப்பு எந்த வகையில் இருந்தது என்பதை பல்வேறு புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்து வாழ்த்தி பேசினார்.

பொறிஞர். சு. சுரேஷ், செயற்பொறியாளர் / குனியமுத்தூர் அவர்கள் தனது வாழ்த்துரையில், இவரை போன்று இன்முகத்தோடு பணியாற்றுவதிலும், வாரிய ஆணைகளை நினைவுபடுத்தி செயல்படுத்துவதிலும் இவருக்கு நிகர் இவர் தான் என்று தெரிவித்தார்.

நமது பொதுச்செயலாளர், தனது வாழ்த்துரையில் இங்கு இந்த நிகழ்ச்சியில் ஒரு கதாநாயகன் அல்ல இரண்டு கதாநாயகர்கள் அமர்ந்து உள்ளனர் என கோவை தெற்கு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் பொறிஞர் சுப்பிரமணியன் அவர்களையும் குறிப்பிட்டு, எந்த ஒரு பணி நிறைவு பாராட்டு விழாவிலும் இல்லாத அளவில், நிகழ்ச்சி முடியும் வரையிலும் இருந்து கலந்து கொண்டமைக்கும், தான் நேரில் சந்தித்து சில பிரச்சனைகளை பற்றி மேற்பார்வைப் பொறியாளரிடம் பேசிய போது அதற்கான உடனடி தீர்வை அளித்ததையும் பாராட்டி பேசினார். அதே போன்று மற்றொரு கதாநாயகன் பொறிஞர். ப. நாகராஜன் அவர்களை பற்றி குறிப்பிடும்போது, அவர் எப்படி நட்புக்கும், குடும்பத்திற்கும், அலுவலக அதிகாரிகள், பணியாளர்களிடமும் இணக்கமானவர் என்பதனை மிக ஆழமாக அனைவரும் ரசிக்கும் வகையில் பாராட்டி பேசினார்.

ஓய்வு பெற்ற பொறியாளர் திரு. ப. நாகராஜன் அவர்களை மின்வாரிய இன்ஜினியர் யூனியன் கோவை மண்டல செயலாளர், பொறிஞர். திரு. N. சென்ராம் அவர்கள் தனது வாழ்த்துரையில் கஜா புயலின் போது தாம் சேர்ந்து பணியாற்றியபோது நடந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்து பேசினார்.

அதே போன்று அவரின் நண்பர் பொறிஞர் K. ஆசைதம்பி, உதவி செயற்பொறியாளர் கோவை வடக்கு அவர்கள் தானும் பொறியாளர் நாராஜனும் பகுதி நேர முதுநிலை படிப்பில் சேர்ந்து படித்த போது நடைபெற்ற நிகழ்வுகளை நினைவுபடுத்தி பேசினார்.

அதே போன்று அவரின் 30 வருட கால நண்பர் திரு. நா. ரகுநாதன் அவர்கள் அழகான ஒரு கவிதையோடு, நட்பின் இலக்கணமாக திகழும் திரு. ப. நாகராஜனின், நட்பு தனக்கு கிடைத்த வரம் என கூறி வாழ்த்தி பேசினார்.

தமிழ்நாடு Employees Federation கோவை மண்டல செயலாளர் திரு. A. முருகவேல் அவர்கள் தனது வாழ்த்துரையில், எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும் தனது பதவியினை தவறாக பயன்படுத்தியது இல்லை எனவும் எந்த சூழ்நிலையிலும் நேர்மையாக பணியாற்றி வந்துள்ளார் என்று கூறினார்.

மாநில தலைவர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் தனது வாழ்த்துரையில் தனக்கும் இவருக்கான நட்பு கடந்த 38 வருடங்களாக உள்ளது எனவும், முதன் முதலில் தொழிற்சங்க ஆரம்பித்தபோது திரு. ப. நாகராஜன் அவர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது எனவும் பல்வேறு சம்பவங்களை நினைவுகூர்ந்து வாழ்த்தி பேசினார்.

அவரின் தவபுதல்வி திருமதி. ஆர்த்தி நாகராஜன் அவர்கள் தனது தந்தை, தனது வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் எப்படி உற்சாகப்படுத்தி தன்னை வழி நடத்தினார். அவர் தனது தந்தையைவிட ஒரு நண்பராக வழிகாட்டினார் என உணர்வு பூர்வமாக பேசினார்.

அவரது குடும்ப உறவினர்கள் அவரது சம்மந்தி திரு. வடிவேல் அவர்கள் அவரது சகோதரி S. ராஜேஸ்வரி பெங்களூரு அவர்கள் பல்வேறு குடும்ப நிகழ்வுகளை நினைவுபடுத்தி வாழ்த்தி பேசினார்.

இறுதியாக ஏற்புரை வழங்கிய பொறிஞர். ப. நாகராஜன், M.E., அவர்கள் தான் வாரியத்தில் பணியில் சேர்ந்தபோது, அப்போதிருந்த அதிகாரி ஒருவர் மூன்று மந்திரங்களை கூறியதாக பின்வருமாறு கூறினார்.

1. வாரியத்தை பற்றி ஒருபோதும் புறம் பேசாதே
2. வாரிய பொருளுக்கு ஆசைப்படாதே.
3. வாரியத்திற்கு வரவேண்டிய ஒரு ரூபாய் வருமானம் கூட உன்னால் தடைபட கூடாது.

மேற்கண்ட மூன்று மந்திரங்களையும் இன்று வரையிலும் கடைபிடித்து வருவதாகவும் அதனால் தானும் சிறப்பாக வளர்ந்து உள்ளதாகவும், மாநில இணை செயலாளர் என்ற பதவி கொடுத்து அழகு பார்த்த பொது செயலாளருக்கும், மாநில தலைவருக்கும் தான் என்றும் கடமைப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

இறுதியாக பொறிஞர். P. பூபதி, உதவி மின்பொறியாளர்/ சிவில் / ஏரோ அவர்கள் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

இந்நிகழ்ச்சியை அனைவரும் வியக்கும் வண்ணம் LCD Projector மூலம் புகைப்படத்துடன் பாடலை இசைத்து வாழ்த்தி பேசுபவர்களை வரவேற்று நிகழ்ச்சியை மிகவும் சுவாரசியமாகவும் திருமதி. B. இந்து, நிர்வாக உதவியாளர் தலைமைப் பொறியாளர் அலுவலகம் / கோவை தெற்கு வட்ட இணை செயலாளர் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

**L. லியோபால்,**
செயலாளர், கோவை தெற்கு வட்டம்

## நினைவிற்கு - ஓய்வூதியர் அடையாள அட்டை

**Memo No. 64547/A18/A183/2016-1, (BOSB) dated : 17.12.2016**

***Sub : Pension - TANGEDCO - Issue of Identity Card to the Pensioners of TANGEDCO - Orders issued - Further instruction - Issued.***

***Ref : (Per) B.P. (Ch) No. 124 (SB) dated 07.07.2009.***

In the reference cited, orders have been issued directing the pension sanctioning authorities to issue Identity Card to the pensioners on application from the pensioner concerned with required details along with a recent stamp size photo and on payment of necessary charges. Now, it has been brought to the notice that the retired officers and employees have moved to their native places and settled there. They could not visit the office from which they have retired to obtain the Identity Card and requested to issue the Identity Card by the pension sanctioning authorities whose office is nearer to the residence of the pensioner concerned. The said request has been considered.

2. All the pension sanctioning authorities are therefore instructed to process the application, if any received from the pensioners, along with the required details by post as prescribed in the reference first cited, verify and process the same without any delay and send the Identity Card by post to the residence of the pensioner concerned. Any deviation in complying with the above instruction, will be viewed seriously.

**R. BALAJI,**
Secretary

# நட்பு தோட்டம்

**- நா. ரகுநாதன்,** கோவை




எங்கள் நட்பு ஒரு தோட்டம் என்பேன்
பதின்ம வயதில்
பதியம் போட்டு வளர்த்த மதம் இருக்கும்
விடலை வயதில்
கடலை போட்டு வளர்த்த செடி இருக்கும்
வாலிப வயதில்
அறம் என்ற உரம் போட்டு வளர்த்த வயல் இருக்கும்
எங்கள் தோட்டத்தில்
அழகாய் மிளகாய் செடிகளும் இருக்கும்
பக்குவமாய் பகிர்ந்து கொள்ள
பாகற்காயும் இருக்கும்!
ஆனால்... அத்தனையும்
தண்ணீர் குடித்து இனிக்கும் நெல்லிக்காய் சுவை கொண்ட
முறுக்கும் வயதில் முருங்கை-தோட்டம்
போட்டதால்...
பக்கத்து தோட்டத்து மல்லிகைக்கும்
மணமுண்டு என அறிந்தோம்.
புடலங்காய் கொடியாய் இருந்த நாங்கள்
இன்று பூசணிக்காயாக மாறியதில்
முல்லைக் கொடிகளுக்கும் பங்குண்டு
(அன்பு மனைவி)
பிள்ளையாய் கொய்யா வளர்த்தோம்
ஆனால் கிடைத்ததெல்லாம் ஆப்பிள்கள்
வயதாகி வெற்றிலைக்கொடி
போட்டாலும்
முடக்கத்தான் கொடி சாறு குடித்து
நடக்கத்தான் செய்வோம்
கசப்பாய் இருப்பதால்
வேப்பிலைக்கு கூட எங்கள் தோட்டத்தில் இடமில்லை
தென்னை மரமாய் வளர்ந்தாலும்
30 வருட நட்பு ஆலமரமாய் நிற்கிறது.
எங்கள் தோட்டத்தில்
களை அடிக்கடி முளைக்கும்
அதையெல்லாம் களையும்
அன்பு பாசம் என்ற உரம் இட்டுள்ளே
எங்கள் நட்பின் பெயர்
வாழையடி வாழை!

## இளநிலை பொறியாளர் Iம் நிலை - பதவி உயர்வு வழக்கு - தீர்ப்பு

**WMP (MD) NO. 24948**
**BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT**
**DATED : 23.01.2025**
**CORAM**
**THE HONOURABLE MR. JUSTICE R. VIJAYAKUMAR**

**WMP (MD) NO. 24948 OF 2024**
**IN**
**WP (MD) NO. 29568 OF 2024**

1. P. Rajkumar
2. S. Kannadaasan
3. J. Sundaresan

Petitioner(s)

Vs

1. **The Chairman cum Managing Director**
Tamil Nadu Generation and Distribution Corporation Limited,
144, Anna Salai, Chennai - 600 002.

2. **The Tamil Nadu Generation and Distribution Corporation Limited,**
Rep. by its Secretary,
144, Anna Salai, Chennai - 600 002.

3. **The Chief Engineer / Personnel,**
Tamil Nadu Generation and Distribution Corporation Limited,
144, Anna Salai, Chennai - 600 002.

4. **TNEB Engineers Sangam,**
Rep. by its General Secretary,
V.S. Sampathkumar, S/o. M. Venkatramasundaram,
New No. 144, Old No. 793, Anna Salai, Chennai - 600 002.

(R4 is impleaded vide court order dated 10.01.2025 in WMP (MD) 889/2025 in WP(MD) 29568/2024 by RVJ)

5. **M. Arun,**
S/o. Mohan,
Plot No. 190, Madurai City, Athilai Main Road, Pothumbu, Madurai-625 018.

6. **TNEB Engineers Union,**
Rep. by its General Secretary, R. Govindharajan, S/o. A. Rajaram, Office No. 5, TNEB Engineers Union, Neat Two Wheeler Stand, No. 144, Anna Salai, Chennai - 600 002. (R5 and R6 are impleaded vide court order dated 21.01.2025)

For Petitioner(s):

M/s/ K. Shanmugasundaram
S. Varsha
M. Mahamani
7010249554

**For Respondent(s**): Mr. B. Ramanathan
Standing Counsel for R1 to R3

Mr. T. Lajapathi Roy
Senior Counsel for M/s. Roy & Roy Associates for R4

Mr. Anwar Sameen for R5 & R6

**ORDER**

This Court by an order dated 06.12.2024 has directed the respondents not to effect any promotion pursuant to the impugned communication of the third respondent dated 09.10.2024 calling for suitability report. A perusal of the impugned communication reveals that the third respondent has called for a suitability report for promoting Junior Engineer Grade-II as Junior Engineer Grade-I.

2. The present writ petition has been filed by aspirants to the post of Assistant Engineers According to the learned counsel for the petitioner, a notification was issued by TANGEDCO for direct recruitment in the year 2019 and the recruitment process was cancelled by way of proceedings dated 04.07.2022.

3. The learned counsel for the petitioner further submits that the Junior Engineer Grade-I, in case if they have acquired B.E. Degree, they can be redesignated as Assistant Engineer as per Service Regulation. Therefore, it is the apprehension of the writ petitioner that if the Junior Engineer Grade-II are promoted as Grade-I Engineers and if some of the redesignated or internal selected as Assistant Engineers, that woul the quota of Assistant Engineer.

4. According to the learned counsel for the petitioner, 1:1 quota has to be followed for the post of Assistant Engineer for direct recruitment and internal selection. This quota would get affect, in case if there is redesignation/internal selection of Grade-I Junior Engineer as Assistant Engineer. Therefore, the writ petition has been filed challenging the suitability report.

5. The learned Standing Counsel appearing for TANGEDCO, on instructions, submits that in case if any re-designation of Junior Engineer Grade-I as Assistant Engineer is made, that would not be in violation of the quota as per Service Regulation and they would strictly follow the Service Regulation with regard to the quota for the promotees to the post of Assistant Engineer.

6. In view of the above said undertakings, the interim order already granted by this Court is hereby modified to the effect that the respondents are at liberty to proceed to issue order of promotion. However, the said promotion shall be subject to the result of the writ petition.

**23.01.2025**

msa

1. **The Chairman cum Managing Director**
   Tamil Nadu Generation and Distribution Corporation Limited,
   144, Anna Salai, Chennai - 600 002.

2. **The Tamil Nadu Generation and Distribution Corporation Limited,**
   Rep by its Secretary,
   144, Anna Salai, Chennai - 600 002.

3. **The Chief Engineer / Personnel,**
   Tamil Nadu Generation and Distribution Corporation Limited,
   144, Anna Salai, Chennai - 600 002.

4. **TNEB Engineers Sangam,**
   Rep. by its General Secretary,
   V.S. Sampthkumar, S/o. M. Venkatramasundaram, New No. 144, Old No. 793,
   Anna Salai, Chennai - 600 002.

5. **M. Arun,**
   S/o. Mohan,
   Plot No. 190, Madurai City, Athilai Main Road, Pothumbu, Madurai - 625 018.

6. **TNEB Engineers Union,**
   Rep. by its General Secretary, R. Govindharajan, S/o. A. Rajaram, Office No. 5, TNEB Engineers Union, Near Two Wheeler Stand, No. 144, Anna Salai, Chennai - 600 002.



**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ERSTWHILE TANGEDCO)**

**Letter No. 005185/G.33/G.332/2025-1, Dated : 27.01.2025**

From
**Er M. SUDARSAN, B.E. (Hon.,)**
Chief Engineer/Personnel,
Administrative Branch,
144, Anna Salai, Chennai - 600 002.

To
**The General Secretary,**
1. Tamil Nadu Electricity Board Accounts & Executive Staff Union.
2. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF).
3. Central Organisation of Tamil Nadu Electricity Employees (COTEE).
4. Minsara Pirivu Anna Thozhir Sangam.
5. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam
6. Tamil Nadu National Electricity Worker's Federation (Xavier Group)
7. Tamil Nadu National Electricity Worker's Federation (Swarnaraj Group)
8. Tamil Nadu Electricity Board Engineers' Sangam.
9. Tamil Nadu Electricity Employees Congress (NLO)
10. Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam.
11. Tamil Nadu Electricity Board Engineers' Association
12. Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association
13. Bharathiya Electricity Employees Federation
14. Tamil Nadu Electricity Board Card Billing Staff Union.
15. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union.
16. Tamil Nadu Electricity Board Engineers Union.
17. Tamil Nadu Electricity Board Employees Federation
18. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam.

Sir,

***Sub : TNPDCL - Discussion with Union/Association on the demands of the employees of the Board - Dates and Time - Intimation.***

***Ref : Certain Demands received from Unions/Association***

*****

I am to inform that a discussion with your Unions/Association regarding resolving your demands for the welfare of employees of TNPDCL will be held on the dates & time mentioned in the Annexure at the Conference Hall at 6th Floor of TANTRANSCO building. I am also to request you to attend the meeting not more than 3 (Three) of the representatives of your Unions.

Encl: Annexure

Yours faithfully,
(Sd.// 27.01.2025)
**Senior Personnel Officer/Labour (i/c)**
**for Chief Engineer/Personnel**

## Scheduled on 01.02.2025

| Sl. No. | Time | Proposed portfolio |
|---|---|---|
| 1. | 11.00 a.m. to 11.30 a.m | Tamil Nadu Electricity Board Accounts & Executive Staff Union |
| 2. | 12.00 Noon to 12.30 p.m | Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF) |
| 3. | 1.00 p.m. to 1.30 p.m | Central Organisation of Tamil Nadu Electricity Employees (COTEE) |
| 4. | 3.00 p.m. to 3.30 p.m | Minsara Pirivu Anna Thozhir Sangam |
| 5. | 4.00 p.m. to 4.30 p.m | Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam |
| 6. | 5.00 p.m. to 5.30 p.m | Tamil Nadu National Electricity Workers' Federation (Xavier Group) |

## Scheduled on 15.02.2025

| Sl. No. | Time | Name of Unions |
|---|---|---|
| 1. | 11.00 a.m. to 11.30 a.m | Tamil Nadu National Electricity Workers' Federation (Swarnaraj Group). |
| 2. | 12.00 Noon to 12.30 p.m | Tamil Nadu Electricity Board Engineers' Sangam |
| 3. | 1.00 p.m. to 1.30 p.m | Tamil Nadu Electricity Employees Congress (NLO) |
| 4. | 3.00 p.m. to 3.30 p.m | Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam |
| 5. | 4.00 p.m. to 4.30 p.m | Tamil Nadu Electricity Board Engineers' Association |
| 6. | 5.00 p.m. to 5.30 p.m | Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association |

**Scheduled on 01.03.2025**

| Sl. No. | Time | Name of Unions |
|---|---|---|
| 1. | 11.00 a.m. to 11.30 a.m | Bharathiya Electricity Employees Federation |
| 2. | 12.00 Noon to 12.30 p.m | Tamil Nadu Electricity Board Card Billing Staff Union |
| 3. | 1.00 p.m. to 1.30 p.m | Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union |
| 4. | 3.00 p.m. to 3.30 p.m | Tamil Nadu Electricity Board Engineers Union |
| 5. | 4.00 p.m. to 4.30 p.m | Tamil Nadu Electricity Board Employees Federation |
| 6. | 5.00 p.m. to 5.30 p.m | Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam |

## வாரிசு வேலை தொடர்பான மறு உத்தரவு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**

**(ABSTRACT)**

Compassionate Appoitnment - Delegation of Powers to the concerned Superintending Engineers - To examine and appoint the legal heirs of the deceased / Medically Invalidated employees under Compassionate grounds - Cancellation Order - Issued.

---

**(Administrative Branch)**

**(Per.) MD TNPDCL Proceedings No. 10**

**Dated : 07.02.2025,**
Thai-25, Khrothi Varudam,
Thiruvalluavar Aandu - 2056.

**READ:-**

(Per.) CMD TNPDCL Proceedings No. 17 (Administrative Branch), dated : 23.09.2024.

*****

**PROCEEDINGS:**

Orders were issued delegating the Powers of the Chief Engineer/Personnel to the concerned Superintending Engineers/EDC/Thermal / Hydro Stations etc., in respect of examining and appointing the eligible legal heirs of the deceased / Medically Invalidated employees under Compassionate grounds vide (Per.) CMD TNPDCL Proceedings No. 17, (Administrative Branch) Dated : 23.09.2024 in the reference cited above is hereby cancelled.

**(BY ORDER OF THE CMD/TNPDCL)**

**M. SUDARSAN**
Chief Engineer/Personnel

# சுற்றறிக்கை

நாள்: 27.01.2025

**வணக்கம் தோழர்களே!**

இந்திய குடியரசு தினம் ஜனவரி 26 அன்று தேசம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப் பட்டிருக்கிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணி காக்க ஒவ்வொரு இந்திய குடிமகனும் சபதமேற்றுள்ள நன்னாளாக அமைந்துள்ளது. கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் பெற்றிட மகாத்மாவின் கொள்கைகள் இன்ன பிற வழிகளைவிட முக்கிய பாத்திரமாக விளங்கியதால்தான் உலகம் முழுவதும் போற்றக் கூடிய தலைவராக உத்மர் காந்தி விளங்குகிறார். சுதந்திரத்திற்கு பின்னர் நடைபெறும் அரசியல் சூழ்நிலைகள் சுதேசிக் கொள்கைக்கு எதிராகி பொருளாதார உலகமயமாக்களின் தாக்கம் தலைக்கேறியிருந்தாலும் தரணியெங்கும் காந்தியத்தின் மகிமைக்கு குறைவுமில்லை, குந்தகமுமில்லை. தேசத்தையும், தேசத் தந்தை மகாத்மாவையும் போற்றி வணங்குவோம்.

2024 டிசம்பர் திங்களில் திருச்சியில் நடைபெற்ற மாநில பொதுக்குழு தீர்மானங்களின் மீதான பேச்சுவார்த்தையை வாரியம் விரைவாக மேற்கொள்ள உள்ளதை எதிர்நோக்கியுள்ளோம்.

குறிப்பாக

1) காலிப்பணியிடங்கள் கள உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர், இளநிலை உதவியாளர், உதவி வரைவாளர், கணக்கீட்டாளர், தட்டச்சர் போன்ற பதவிகள் நேரடி நியமனம் செய்வது.
2) தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர், உள்முகத் தேர்வு.
3) கேங்மேன் - களஉதவியாளர் பெயர் மாற்றம், கேங்மேன் மேலும் 20% ஊர்மாறுதல், கேங்மேன் 6% ஊதிய உயர்வு மறுக்கப்பட்டதை பெறுவது.
4) தேர்வு செய்து நிறுத்தி வைத்துள்ள 5000 கேங்மேன் பணி நியமனம் பெறுவது.
5) ஒப்பந்த தொழிலாளர், பகுதி நேரப் பணியாளர், பணி நிரந்தரம்.
6) ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை நிறுத்தி வைப்பது.
7) நிர்வாக பணியாளர்களுக்கு உள்ள ஊதிய வித்தியாசத்தை சரிப்படுத்தல் (Superindent, Section officerக்கு இணையாக Adm Supervisor & Accounts supervisor).
8) கணக்கு மேற்பார்வையாளர், முதன்மைப்பட்டியல் மற்றும் பதவி உயர்வு.
9) DGRC 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்துதல் போன்ற பிரதான கோரிக்கைகள் 54ன் மீது தீர்வு கண்டிட கோரிக்கை வைத்துள்ளோம்.

பிப்ரவரி மாதத்தில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தை, அதன் மீதான தீர்வுகள், எனும் அடிப்படையில் மார்ச் முதல் வாரத்தில் திருச்சியில் நடைபெற உள்ள மாநில செயற்குழுவில் விவாதித்து முடிவெடுத்து களம் புக தயாராகுவோம்.

2025 மார்ச் இறுதிக்குள் உறுப்பினர் சந்தா வசூல், 2025 மே மாதத்திற்குள் கட்டிட நிதி வசூல் தீவிரப்படுத்திட வேண்டுகிறோம்.

பிப்ரவரியிலிருந்து - மார்ச் வரை நடைபெற உள்ள மண்டல கூட்டங்களில் அடுத்த கட்ட ஆக்கபூர்வமான நகர்வுக்கு அடித்தளமிடுவோம்.

பேச்சுவார்த்தை என்ற பேராயுதத்தை கையிலெடுப்போம்! வெற்றி என்ற இலக்கை நோக்கி பயணிப்போம்!!

நன்றி!

தோழமையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# ✉ பெடரேஷன் கடிதங்கள் 

பெறுதல்: நாள் : 01.02.2025

**மேற்பார்வை பொறியாளர்**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
நாமக்கல்.

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - நாமக்கல் மின்பகிர்மான வட்டம் - கேங்மேன் பணியாளர்கள் வட்டத்திற்குள் ஊர்மாறுதல் உத்தரவு வழங்கிட கோருவது தொடர்பாக.**

நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் பணிபுரிந்து வரும் கேங்மேன் பணியாளர்களில் பலர் கடந்த 2 ஆண்டுகளாக வட்டத்திற்குள் ஊர் மாற்றம் கோரி விண்ணப்பித்து இருந்த நிலையில் கடந்த ஆண்டு வரை அவர்களுக்கு வட்டத்திற்குள் ஊர் மாறுதல் உத்தரவு வழங்கப்படவில்லை.

பல்வேறு மின்பகிர்மான வட்டங்களில் கேங்மேன் பணியாளர்களுக்கு வட்டத்திற்குள் ஊர் மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் மட்டும் ஊர் மாறுதல் உத்தரவு வழங்கப்படாமல் உள்ளது.

எனவே, 01/2005 மாதத்தில் கேங்மேன் பணியாளர்களில் வட்டத்திற்குள் விருப்ப ஊர் மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள பணியாளர்களின் விருப்ப ஊர்மாறுதல் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து உரிய ஊர்மாறுதல் உத்தரவுகளை வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள
திட்டச் செயலாளர்
TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
நாமக்கல் கிளை

★★★

பெறுதல்: நாள் : 01.02.2025

**மேற்பார்வை பொறியாளர்**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
நாமக்கல்.

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - நாமக்கல் மின்பகிர்மான வட்டம் - களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு தொடர்பாக.**

நாமக்கல் மின்பகிர்மான வட்டத்துடன் சேலம் மின்பகிர்மான வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் களப்பணியாளர்களை இணைத்து அனைத்து நிலை பணிகளுக்கான உத்தேச முதன்மை பட்டியல் மட்டும் வெளியிடப்பட்ட நிலையில் உள்ளது.

எனவே இனியும் காலம் தாழ்த்தாது இறுதி முதன்மை பட்டியல் வெளியிட்டு தற்போது களப்பணியில் காலியாக உள்ள (WM, CA, CI LI FM, Special Grade Foreman) பணி இடங்களையும் எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள காலி பணியிடங்களை கருத்தில் கொண்டு நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் களப்பணி ஊழியர்களுக்கு பதவி உயர்வு பட்டியல் தயாரித்திட தகுதிக்காண் அறிக்கையினை பெற்று பதவி உயர்வு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவண செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள
திட்டச் செயலாளர்
TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
நாமக்கல் கிளை

## தமிழக அரசு - ஓய்வூதிய திட்டங்கள் - குழு அமைத்து செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்: 271** **நாள்: 04.02.2025**

கடந்த 01.04.2003 - முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே வேளையில் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டம் (National Pension System) 01.01.2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், மாநில அரசுப் பணியாளர்களுக்கு தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமே தொடர அனுமதிக்கப்பட்டது.

எனினும் மாநில அரசுப் பணியாளர்கள் 01.04.2003-க்கு முன்பிருந்த திட்டத்தை செயல்படுத்திட வேண்டி தொடர்ந்து கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்நிலையில், 24.01.2025 அன்று ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசின் நிதி நிலையினையும், பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தத் தக்க உரிய ஓய்வூதிய முறை குறித்து பரிந்துரையினை அரசிற்கு அளித்திட கீழ்க்காணும் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1. திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
2. டாக்டர் கே.ஆர். சண்முகம், முன்னாள் இயக்குநர், Madras School of Economics

3. திரு. பிரத்திக் தாயள், இ.ஆ.ப., துணைச் செயலாளர் (வரவு செலவு), நிதித் துறை, உறுப்பினர் செயலர்.

இக்குழு தனது விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரையினை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

★★★

## TNEBREOS கடிதம்

பெறுதல்: நாள் : 28.01.2025

**தலைமை உள் தணிக்கை அலுவலர்,**
வாரிய அலுவலக தணிக்கை கிளை,
தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.

அய்யா,

**பொருள் : ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்/ கருணை தொகை பெறுபவர்கள் 2024ம் ஆண்டிற்கான வாழ்நாள் சான்று வங்கிகளில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டது தொடர்பாக.**

**பார்வை : 1. Per (CMD) TANGEDCO Proceedings No. 84 date : 10.06.2024.**

ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் / கருணைத் தொகை பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் பார்வையில் கண்டுள்ள மின்வாரிய ஆணையின்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளுக்கு நேரடியாக சென்று தங்களது வாழ்நாள் சான்றினை Manual ஆக சமர்ப்பித்துள்ளார்கள். நேரடியாக பெற்ற வாழ்நாள் சான்றுகளை வங்கியிலிருந்து DCIAO Pensionக்கு scan செய்து அனுப்பப்பட்டுள்ளது. உதாரணம் IOB சங்கரன்கோவில் (0848) கிளையிலிருந்து 136 வாழ்நாள் சான்றுகளும், IOB நாகலாபுரம் (0282) கிளையிலிருந்து 80 வாழ்நாள் சான்றுகளும் தணிக்கை கிளைக்கு scan செய்து அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், scan செய்து அனுப்பப்பட்டுள்ள சான்றுகளுக்கு இதுவரை வாழ்நாள் சான்றுகள் பெறப்பட்டதற்கான LC given: MDLC என பதிவு வரவில்லை. எனவே அனைத்து வங்கிகளிலிருந்தும் scan செய்து அனுப்பப்பட்டுள்ள வாழ்நாள் சான்றுகளை பதிவிறக்கம் செய்து வங்கிகளில் வாழ்நாள் சான்று சமர்ப்பித்துள்ள அனைவருக்கும் ஓய்வூதியம் நிறுத்தாதல் தொடர்ந்து வழங்க வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,
**(P. சுடலை))**
பொதுச்செயலாளர்/TNEBREOS

# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்

# TNEB REOS

**பதிவு எண். 31 / சென்னை**

(இணைப்பு : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்)

**கிளை : உடுமலை மின் வட்டம்**

## உடுமலை மின் வட்டத்தில் துவக்க விழா மற்றும் பொதுக்குழு அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம். வருகின்ற **19.03.2025 புதன்கிழமை காலை 10.00 மணிஅளவில் பொள்ளாச்சி, காந்தி சிலை அருகில் உள்ள, சக்தி திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்க துவக்க விழா மற்றும் பொதுக்குழு** திரு. **உரல்பட்டி S.சுப்பிரமணியம்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் அனைத்து ஓய்வூதியர்களும், குடும்ப ஓய்வூதியர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

**சிறப்புரை :**

திரு. **A. சேக்கிழார்** அவர்கள்,

பொதுச்செயலாளர், TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்.
UTUC, சென்னை.

**வாழ்த்துரை வழங்குவோர் :**

திரு. **J.L. பாஸ்டின்ராஜ்**
மாநிலத் தலைவர் TNEBEF

திரு. **N. பழனி**
மாநிலப் பொருளாளர் TNEBEF

திரு. **S. மணிகண்டன்**
மாநில துணைப் பொதுச்செயலாளர் TNEBEF

திரு. **K. நாராயணமூர்த்தி**
மாநில துணைப் பொதுச்செயலாளர் TNEBEF

திரு. **S. ராஜாங்கம்**
மாநில செயல் தலைவர் TNEBEF

திரு. **S. மோகன்**
மாநில உப தலைவர் TNEBEF

திரு. **G.K. பாலகிருஷ்ணன்**
மாநில அமைப்பு செயலாளர் TNEBEF

திரு. **A. அருணாசலம்**
மாநிலத் தலைவர் TNEB REAOS சென்னை

திரு. **K. சிவசுப்பு பாண்டியன்**
பொருளாளர், TNEB REAOS நெல்லை

திரு. **P. சுடலை**
பொதுச் செயலாளர் TNEB REAOS சென்னை

திரு. **A. அண்ணாதுரை**
செயல்தலைவர், TNEB REAOS கோவை

திரு. **N. முத்தையா**
மாநில உபதலைவர் TNEB REAOS நெல்லை

திரு. **R. சக்திவேல்**
மாநில துணைப் பொதுச்செயலாளர் TNEB REAOS உடுமலை

திரு. **S. பார்த்தசாரதி**
மாநில துணைப் பொதுச்செயலாளர் TNEB REAOS சென்னை

திரு. **B. வீரமணி**
கோவை கிளைச் செயலாளர் TNEB REAOS கோவை

நன்றியுரை : திரு. **K. மயில்சாமி** பொள்ளாச்சி

**இங்ஙனம், அமைப்பாளர்கள் :**

**R. கோவிந்தசாமி, K. மயில்சாமி, P. நாகராஜ், K. கோதண்டம், R. மயில்சாமி, D. தேவதாஸ், K. குஞ்சுமோன், S. ராஜசேகரன், உடுமலை.**

**2025-ஆம் ஆண்டுக்கான சந்தாவும், விழா சிறப்புற நடைபெற அனைவரும் வளர்ச்சி நிதியாக ரூ. 300/-ம் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.**

*ஸ்ரீ மாசாணியம்மன் அச்சகம், நேரு வீதி, உடுமலை. 93606 64835*

## நான்மணிக்கடிகை பாடல். 31 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### பாடல் (31) குழித்துழி நிற்பது நீர்!

*குழித்துழி நிற்பது நீர்;தன்னைப் பல்லோர்*
*பழித்துழி நிற்பது பாவம்; - அழித்துச்*
*செறிவழி நிற்பது காமம்; தனக்கொன்று*
*உறுவுழி நிற்பது அறிவு.*

**கருத்துரை**

பள்ளம் எங்கிருக்கிறதோ அந்த இடத்திற்குச் சென்று தேங்கி நிற்பது தான் தண்ணீரின் இயல்பு!

சான்றோர் பழிக்கும் செயல்களைப் புரிகின்ற கீழ்மக்களிடத்தில் தீவினைகள் குடிகொண்டிருப்பதும் இயல்பு!

தவநெறியில் ஒழுகும் தூய வாழ்வு இல்லாத மக்களிடத்தில் காம உணர்வு மேலோங்கி நிற்பதும் இயல்பு!

அதுபோல், ஒருவனுக்கு இடர் வரும்போது அவனுக்குத் துணையாக அவனது அறிவு நிற்பதும் இயல்பு!

**அருஞ்சொற்பொருள்:**

நீர் குழித்துழி நிற்பது = தண்ணீர் குழிக்கப்பட்ட இடத்தில் நிற்கும் இயல்பு உடையது; பல்லோர் = சான்றோர் பலரும்; தன்னைப் பழித்துழி = பழிக்கும் செயல்களைப் புரிகின்ற கீழ்மக்களிடத்தில்; பாவம் = தீவினை என்பது; நிற்பது = சூழ்ந்து நிற்கும் இயல்புடையது; அழித்து = தவ நெறியைக் கெடுத்து; செறிவுழி = தீய நெறியில் வயப்பட்டால்; காமம் = காம உணர்வு; நிற்பது = மேலோங்கி நிற்பது இயல்பு; தனக்கு = அறிஞன் ஒருவனுக்கு; ஒன்று உறுவுழி = ஓர் இடர் உண்டான காலத்தில்; அறிவு = அவனது கல்வியறிவு; நிற்பது = துணையாய் நிற்கும் இயல்பு உடையது.


**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!



**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

**✆ : 9841446621 : 8939152361**

**tnebemployeesfederation3600@gmail.com**


*__குறிப்பு :__ செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# விதியும் மதியும்

**- சிவநாச்சியார்**

**வி**தி என்பது, இயற்கையின் அமைப்புகளும், அதன் இயக்க ஒழுங்கு நியதிகளும் ஆகும். இயற்கையில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளும் விதிதான்.

அதைத் தெரிந்து, அறிவால் அதற்கு முரண்படாது, அனுபவிக்கும் பொழுது அதை மதி என்று சொல்கிறோம்.

உதாரணமாக ஒரு வண்டி உள்ளது. அந்த வண்டியில் பிரயாணம் செய்து கொண்டுள்ளோம். வண்டிக்கு வழிநடத்திச் செல்பவர் (கிளினர்) கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் நம்மை அழைத்துச் செல்பவர் (டிரைவர்) இல்லாமல் இருக்க முடியாது. கண்டிப்பாக வண்டிக்கு டிரைவர் உண்டு. அந்த வண்டி நாம் செல்ல வேண்டிய இடத்திற்கு நம்மை சரியாக அழைத்துச் சென்று கொண்டுள்ளது. ஆனால் சில சமயங்களில் நாம் வண்டியின் வேகத்தை குறுக்கிட்டும், இடைஞ்சல்களும் அவ்வப்பொழுது ஏற்படுத்துகிறோம்.

அதனால், வண்டியின் செல்லும் வேகம் குறைந்தும், போக வேண்டிய இடத்திற்கு போக முடியாமலும் போய் விடுகிறது. அந்த வண்டி தான் நம் உடல். வண்டியின் டிரைவர் தான் இறைவன். அதை தான் தலை **'விதி'** என்று நொந்து கொள்கிறோம்.

சில சமயங்களில் விதி வலியது என்று சொல்கிறோம். உண்மையில் சொல்ல போனால் விதியை விட மதி தான் அதி அற்புமானது. விதியை வெல்லும் அளவிற்கு ஆற்றல் பொருந்தியது மதி. ஆறாவது அறிவு என்று சொல்லக்கூடிய மதியை நாம் பயன்படுத்தும் விதத்தில் தான் நம் வாழ்க்கை பயணம் அமைகிறது.

நமக்கு இரண்டு விதமான தேவைகள் உண்டு. ஒன்று உடல் தேவை மற்றொன்று மனம் தேவை. உடல் தேவை பெரும்பாலும் உணர்வுகளை ஒட்டி எழும். மற்ற சிக்கல்களுக்கும் காரணமும் உடல் தேவையினால் தான். தேவையைப் பொறுத்து போதும் என்கின்ற உணர்வும் தோன்றுகிறது.தேவை எழுந்து கொண்டே இருந்து கொண்டே தான் இருக்கும். ஆனால் மனத்தேவைக்கு அறிவு பசிக்கு நான் யார்? என்பதை உணர்ந்து கொண்டாலே அறிவு பசி அடங்கி போகும்.

காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்று சொல்வார்கள். காரியம் நாம், காரணம் கடவுள். விதி என்பது இயற்கையின் அம்சம். தலைவிதி என்பது இறைவனால் விதிக்கப்பட்டது அல்ல. மனிதனால் தோற்றுவிக்கப்பட்டது.எப்படி என்கிறீர்களா?ஆதி மனிதன் முதற் கொண்டு இன்று வரை மனிதன் செய்த பாவ, புண்ணியங்களுக்கேற்ப நாம் வாழ்க்கையில் பலன்களை (இன்பம், துன்பம்) அனுபவித்து வருகிறோம். அதை தான் தலை**'விதி'** என்கிறோம். இந்த விதியை நம்மால் மாற்ற முடியாதா? என்ன? நம்மால் முடியும். நிச்சயமாக முடியும்.

நம் முன்னோர்களின் செயல்களுக்கேற்ப நாம் பாவ, புண்ணி யங்களை அனுபவிக்கிறோம்.

**''அரிது அரிது மானிடர் ஆதல் அரிது,**
**மானிடர் ஆயினும் கூன், குருடு, செவிடு,**
**பேடு நீங்கி பிறத்தல் அரிது,**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது,**
**ஞானமும் கல்வியும் நயந்த காலையும்**

**தானமும் தவமும் தான் செயல் அரிது**
**தானமும் தவமும் தான்செய்வ ராயின்**
**வானவர் நாடு வழி திறந்திடுமே''**

என்கின்ற ஔவை பாட்டியின் பாடலுக்கேற்ப நாம் அரிதான மானிட பிறவி எடுத்து வந்துள்ளோம். இப்பிறவியில் நாம் ஆற்ற கடமைகளை சரியாக செய்து, அறம் வழி பின்பற்றி தர்மத்தின் வழி செயல்படுவோமானால் இன்பம் மட்டுமே நிறைந்த சொர்க்கத்திற்கான வழி தானாக அமையும்.

**''அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல.''**

அறத்தினால் வருவதுதான் இன்பம். மற்றவை எல்லாம் இன்பம் இல்லாதவை. புகழும் இல்லாதவை.

அந்த ஆண்டவனே நம் பக்கம் தான் என்று சொல்வது போல் நிஜமாகும். இறைவனே நம் பக்கம் என்று இருக்கும் போது விதியால் ஆவதொன்றுமிலாலை. விதியை நொந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. விதி இறைவனால் விதிக்கப்பட்டது அல்ல. நம் பாவ, புண்ணியங்களுக்கேற்ப உண்டானது தான். விதியை நம்மால் மாற்ற முடியும்.

இன்று புதிதாய் பிறந்தோம் என்ற எண்ணத்தோடு இன்றிலிருந்து இக்கணத்திலிருந்து தர்மத்தின் வழி அறச்செயல்களை புரிந்து நம் சந்ததியினர் மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும் வாழ நம்மால் இயன்ற நற்காரியங்களை செய்வோம்.

## நன்றி! நன்றி!! நன்றி!!!


### S. மணிகண்டன்

துணை பொதுச்செயலாளர்
17.11.2024 TNEBEF GS
பிறந்த நாள் வளர்ச்சி நிதி ரூ. **2000/-**



### C.G. பால்

கம்பியாளர் (ஓய்வு) / கோவை
80வது பிறந்த நாளுக்கான
வளர்ச்சி நிதி ரூ. **1000/-**



### S. தியாகராஜன்

சென்னை வடக்கு
பணி ஓய்வுக்கான
வளர்ச்சி நிதி ரூ. **5000/-**



# பெண்மையை போற்றுவோம்

**- M. பாரதி,** மாநில செயலாளர்



**தி**க்கெட்டும் ஒலிக்கட்டும் பெண்ணியம் மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்று போற்றி பாடிய கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களை அனைத்து பெண்களும் நினைவு கொள்ள வேண்டும் ஒவ்வொரு ஆண்டும் உலக மகளிர் தினம் மார்ச் 8ஆம் தேதி கொண்டாடப்படுகிறது பெண்களை போற்றும்விதமாக பெண்களின் முக்கியதுவத்தை உணர்த்தும்விதமாக முதல் மகளிர் தினம் 1975ல் கொண்டாடப்பட்டது. ஒரு பெண்ணின் முன்னேற்றம் என்பது அவளது குடும்பத்தையும் இந்த சமுதாயத்தையும் முன்னேற்றுவது ஆகும் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று பெண்களை வீட்டிற்குள்ளேயே முடக்கிய காலம் மாறி இன்று கல்வியில் மட்டுமல்லாமல் விஞ்ஞானம். விளையாட்டு என்று பல துறைகளில் தன் திறமையை இந்த உலகில் தடம் பதித்துள்ளனர் இந்த அழகிய தருணத்தில் வீரமங்கையரான வேலுநாச்சியார் ஜான்சிராணி போன்றோரையும் சரித்திரம் படைத்த அன்னை தெரேசா கல்பனா சாவ்லா போன்ற பெண் இனத்திற்கு பெருமை சேர்த்த பெண்களை நினைவு கொள்ள வேண்டும் உழைப்பில் தேனீயாய். தன்னம்பிக்கையின் திறவுகோலாய் இன்று உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் பெண். பாரதி கண்ட புதுமை பெண்களாய் தன்னை மாற்றி கொண்டாலும் இந்த சமுதாயம் பாலியல் துன்புறுத்தலால் நசுக்கி கொண்டுதான் இருக்கிறது. பெண் குழந்தைகளுக்கு இப்படி உடை அணிய வேண்டும் இப்படி நடக்க வேண்டும் என்று அறிவுரை கூறும் சமுதாயம் ஆண் பிள்ளைகள் பெண்களை ஆபாச எண்ணத்தோடு பார்க்கக் கூடாது என்பதையும் கற்று கொடுத்தால் நன்று. நம் வாழ்விலும், சமூகத்திலும் பெண்ணின் முக்கியதுவத்தை உணர்ந்து அவர்கள் சாதனைகள் பல புரிய ஊக்குவிப்போம். பெண்ணின் மகத்துவத்தை மனதார உணர்ந்தவர்களாக பெண்ணிணத்தை காக்க அனைவரும் இந்த மகளிர் தின நன்னாளில் உறுதியேற்க வேண்டும். அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்.

★★★

# பெண்கள் தினத்திற்கு என் சிறிய உதிரிப்பூக்கள்

- **பா. சிவசங்கரி,** மாநில இணைச் செயலாளர்

**பெ**ண் என்பவள் இரண்டெழுத்து படைப்பின் கடவுள். இறைவனுக்கு நிகராக போற்றப்படுபவள் பெண்...

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று இருந்த போதிலும் ஒரு சில பெண்களே எதிர்த்து போராடி சாதித்து காட்டினர்....

ஆனால் இன்றோ, ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு துறையிலும் சாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அன்பே உருவானவள்தான் பெண் ...இவள் எடுக்கும் உருவ வடிவங்கள் தான் எத்தனை எத்தனை பார்ப்போமா.

சிறு மழலையாய் பிறந்து, தனது அப்பாவின் செல்ல பிள்ளையாக வளர்ந்து, நல் மாணவியாய் பெயர் எடுத்து, இளம் பெண்ணாய் உருவெடுத்து, நல்ல தோழியாய் வலம் வந்து, விளையாட்டுகளில் வெற்றி வாகை சூடி, வீரமங்கையாய், உற்ற தோழிகள் இடத்தில் நல் அன்பை மட்டுமே காட்டி, காதலியாய், மனைவியாய், புகுந்த வீட்டின் மருமகளாய், உறவினர் போற்றும் திருமகளாய், வீட்டின் குலமகளாய், தழைத்து ஓங்கி, இத்தனை உருவ வடிவங்களா! போதாது என எண்ணி, நாடே போற்றும் தேசத்தின் தலைவியாய், நல் அரசியல் வாதியாய், ஜனாதிபதியாய், பிரதமராய், கவி மழை பெய்யும் கவிஞராய், நல்ல பண்புள்ள பேச்சாளராய், உயிர்காக்கும் மருத்துவராய், செவிலியராய், தெருவை சுத்தம் செய்யும் சமூகப் பணியாளராய், பல்வேறு துறைகளில் சாதித்து, பல உருவங்கள் எடுத்து, அகிலம் இயங்க, அனைத்து உயிரும் சிறப்புற அவரது அன்பிற்கு மட்டுமே உலகம் வசமாகும்...

எல்லா உயிர்களுமே தாயின் அன்பிற்கு கட்டுப்படும் என்பார்கள்... அன்பே உருவானவள் தான் பெண் மென்மையானவளும் அவளே.. அப்பா நமக்கு நல்வழியைத்தான் காட்டுவார்.ஆனால் நல் வாழ்வை கொடுப்பது தாய் மட்டுமே...

நீர் இன்று அமையாது உலகு எனின் யார் யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு என்றார் வள்ளுவர்.

குறளின் விளக்கம்: நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலை பெறாமல் போகும். அதுபோல எந்த ஒரு ஆணும், அவளின்றி அமையாது என்னுலகம். அன்பே அவள் அவளே அன்பு...

பெண்மையை நேசிப்போம். அவள் அன்பை சுவாசிப்போம். நம் பாரத நாட்டில் பெண்ணாய் பிறந்திட பெருமிதம் கொள்வோம்.

## பெண்மையைப் போற்றுவோம்

**A. ஸ்ரீமதி,** மாநில செயலாளர்

‘‘பெண்மை வாழ்கவென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்க வென்று கூத்திடுவோமடா’’

என்று மகாகவி பாரதியாரும்

‘‘மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா’’

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் பெண்களை போற்றி பாடுகின்றனர்.

திருவள்ளுவரோ இன்னும் ஒரு படி மேலே போய் ‘‘பெண்ணின் பெருந் தக்க யாவுள’’ என்கிறார். பெண்ணை விட பெருமையுடையவை ஒன்றும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. பெண் ஒரு தெய்வ பிறப்பு என்பதால் தான் உயிர் வாழ இன்றியமையாத நீர் நிலம் போன்றவை பெண்ணாகவே கருதி போற்றப்படுகின்றன.

என் மனித குலம் தழைக்க வந்தவள், அன்பிற்கினியவள், கருணை வடிவானவள், மனிதனால் முதலில் அறிந்து கொள்ளப்பட்ட உறவாக தாய் உறவு மட்டுமே இருந்திருக்க முடியும்.

பொதுமறையாம் திருக்குறள் பெண்ணின் பெருமையை அழகாக எடுத்துரைக்கின்றது. உலகத்தை ஆற்றலாக இருந்து பெண்ணே இயக்கிக் கொண்டிருக்கிறாள்.

வள்ளுவர் ''பெண்ணின் பெருந் தக்க யாவுள'' என்று பெண்மையை உயர்வு செய்கிறார். திருக்குறள் காட்டும் பெண்மை உயர்ந்தது உன்னதமானது தன்னையும் உயர்த்திக்கொண்டு தன்னை சார்ந்தவர்களையும் உலகையும் உயர்த்தக் கூடியதாக விளங்குகின்றது. தாய்மொழி, தாய் நாடு, கங்கை, காவிரித்தாய் என்று பெண்களை தாயாக பாவிக்கும் சமூகம் நமது பாரத சமூகமாகும்.

எந்த நாட்டில் பெண்கள் சமமாக நடத்தப்படுகிறார்களோ அந்த நாடே முன்னேறும். பெண்ணின் பெருமையை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளது.

''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு''என்று காலம் மாறி என்று கணினி துறை வரை அனைத்து துறைகளிலும் மகளிர் பல சாதனைகள் படைத்து உயர்ந்துள்ளனர்.

பெண்மையின் ஆளுமைத் திறனை உலகிற்கு பறைசாற்றிய அற்புதம் பெண்கள் சிலரை நினைவு கூறுவோம்.

வீரத்திற்கு -வேலு நாச்சியார், ஜான்சி ராணி
கல்வியில்-சாவித்திரிபாய் புலே
மருத்துவத்துறையில்-முத்துலட்சுமி அம்மையார்.
விஞ்ஞான துறையில்-மேடம் கியூரி
விளையாட்டு துறையில்-பிவி. சிந்து, சானியா மிர்சா போன்ற பல துறைகளில் பெண்கள் சாதனை புரிந்து வருகின்றனர்.

தாய், சகோதரி, மனைவி, மகள் என்று பன்முகப் பரிணாமம் பெறும் பெண்கள் தியாகத்தின் மறு உருவமாக திகழ்கின்றனர். அவர்களின் தியாகம் போற்றத்தக்கது ஆகும்.

எனவே, பரம்பரை பரம்பரையாக பாழாய் போன சமூகத்தை படிப்படியாக பகுத்தறிவு பாதைக்கு அழைத்துச் சென்ற நம் முன்னோர்களின் சீரிய போராட்டங்களினால் பெண் விடுதலை இன்று போற்றப்படுகிறது.

நம் நாட்டின் சமூக சம உரிமை, சமத்துவம், அரசியல், கல்வி, பொருளாதாரம் போன்ற அனைத்து துறைகளிலும் பெண்கள் இன்று முதன்மையானவர்களாக போற்றப்படுகின்றனர். எனவே, மகளிர் தினமான இந்நாளில் பெண்மையை போற்றுவோம் அனைத்து துறைகளிலும் முன்னேறுவோம் என சூளுரைப்போம்.

## பெண்மை என்னும் உண்மை

**- சி. சரத்குமாரி,** மாநில செயலாளர்

பெண்ணே! பெண்ணே! சிங்கப் பெண்ணே! சிங்கார உலகின் தங்கப் பெண்ணே!
எங்கும் உலகின் உயிர் கொடுக்கும் மங்காத புகழின் மகளே!
அடுப்புகளுள் கிடந்த நாம் ஆகாயத்திலும் பறந்தோமடி!
ஆணுக்கிங்கே நிகராக ஆளவும் செய்தோமடி- நாட்டை ஆளவும் செய்தோமடி...!
தாய்மையெனும் வரம் நமக்கு தானமாய் கடவுள் தந்ததடி!

பெண்மைக்கே உண்மையான பெருமை அது உணர்ந்தடடி!
நாணம் கொள்ள வேண்டுமடி...!
நளினம் உனக்கு தேவையடி...!
சிரித்துப் பழகிட வேண்டுமடி...!
சில நேரம் சீறிப் பாயவும் பழகிடடி.... !
ஏளனம் செய்யும் கூட்டம் கண்டு எரிமலையாய் நீ எரிந்திடடி...!
வஞ்சகம் பேசும் நெஞ்சகம் கண்டால் கொஞ்சம் விலகி நீயும் சென்றிடடி...!
நம் மண்ணின் மகிமையை பேணிடடி.....!
தமிழ்ப் பெண்ணின் பெருமையை கூறிடடி....!
அரைகுறை ஆடை அணிந்தாலும் அதற்கும் வரைமுறை உண்டு உணர்ந்திடடி.....!
அன்புக்கு மட்டுமே அடிமை நீ ஆகிடடி...!
அன்பிலும் கலப்படம் உண்டு அறிவுடன் நீ நடந்திடடி...!
மனைவியாய் மனையில் மகிழ்ந்திடடி...!
துணைவியாய்க் கணவனுக்கு தோள்கொடடி...!
குடும்பக் கோயிலில் நீ... குத்துவிளக்கடி...!
குனிந்து நடந்தாலும் நீ... குடும்ப பெண்ணடி...!
என்றும் குலவிளக்கடி...!

## ‘‘சர்வதேச மகளிர் தின விழா வாழ்த்து மடல்’’

**– சி. சரத்குமாரி,** மாநில செயலாளர்

‘‘சர்வதேச மகளிர் தின விழா வாழ்த்து மடல்’’ நான் தைரியமாக இருந்து சார்பு மற்றும் சமத்துவமின்மையை சவால் செய்வேன்’’

நான் தைரியமாக இருந்து வன்முறைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வேன்.

நான் துணிச்சலாக இருந்து பெண்களின் முன்னேற்றத்தை முன்னெடுப்பேன்.

நான் தைரியமாக இருந்து பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவேன்.

உலகளவில், பல்வேறு துறைகளில் பெண்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுகிறோம். இந்த கொண்டாட்டம், தங்கள் சொந்த துறைகளில் சிறந்து விளங்கிய பெண் ஆளுமைகளுக்கு அங்கீகாரம் அளிக்கிறது. நிச்சயமாக, பெண்கள் பின்னர் சமூகம் மற்றும் நாட்டின் நலனுக்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இந்த கொண்டாட்டம் நம் வாழ்க்கையிலும் சமூகத்திலும் பெண்கள் மீதான பாராட்டு, மரியாதை, அன்பு மற்றும் அக்கறையின் அடையாளமாகும்.

கூடுதலாக, பள்ளிகளும் கல்லூரிகளும் இப்போது மகளிர் தினத்தைக் கொண்டாடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது இளம் தலைமுறையினரின் மனதில், அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே பெண்கள் மீதான மரியாதையையும் அக்கறையையும் வளர்க்கும்.

வீட்டுப் பொறுப்புகள் மட்டுமே அவர்களின் ஒரே பணிப் பகுதி. ஆனால் காலப்போக்கில் சமூகம் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. மேலும், இந்தத் தலைமுறை மிகுந்த பொறுப்புள்ள பெண்களை நம்புகிறது மற்றும் மதிக்கிறது.

தற்போது, பெண்களுக்கு வேலையில் சம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, மேலும் பல துறைகளில் ஆண்களுக்கு மத்தியில் நிற்கவும், சில சமயங்களில் ஆண்களை விட முன்னேறவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இன்று பெண்கள் தங்கள் பலங்களையும் திறன்களையும் உணர்ந்து, தங்கள் வீட்டை விட்டு வெளியேறத் தயாராக உள்ளனர், இது அவர்களின் வீட்டின் மற்றும் முழு சமூகத்தின் வெற்றிக்கும் பங்களிக்கிறது.

பெண்கள் உண்மையில் உலகையே தங்கள் பக்கம் திருப்ப வைக்கிறார்கள். மேலும், முன்பு அது சாத்தியமில்லை, ஆனால் இப்போது அது சாத்தியம், இன்று அவர்கள் அதைச் செய்கிறார்கள். மேலும் பெண்கள் பெரிய உயரங்களை எட்டுவதையும் விண்வெளிக்கு கூட பயணிப்பதையும் நீங்கள் காணலாம்.

கூடுதலாக, அவர்கள் ஒவ்வொரு துறையிலும் நுழைந்து, அவர்கள் என்ன செய்ய முடியும் என்பதை நிரூபித்து அனைத்திலும் வெற்றி பெறுகிறார்கள். பெண்களின் பங்கேற்பு சமூகங்கள், நிறுவனங்கள் மற்றும் நாடுகளை உயர்த்துவதற்கான மிகவும் பயனுள்ள வழியாகும்.

கூடுதலாக, பெண்களின் பங்கேற்பு சமாதான ஒப்பந்தங்களை வலுப்படுத்துகிறது, சமூகங்களை மேலும் வலுப்படுத்துகிறது, மேலும் பொருளாதாரங்களை மேலும் துடிப்பானதாக ஆக்குகிறது. பெண்களின் சுதந்திரம்

நவீன பெண்கள் இனி ஆண்களைச் சார்ந்து இல்லை. அவர்கள் எல்லா அம்சங்களிலும் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள், மேலும் ஆண்களுக்குச் சமமாக எல்லாவற்றையும் செய்ய வல்லவர்கள். மேலும், பாலினத்திற்காக அல்ல, அவர்களின் சொந்த அடையாளத்திற்காக அவர்கள் ஒவ்வொருவரையும் நாம் மதிக்க வேண்டும்.

மேலும், வீடு மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பெண்களும் ஆண்களும் சமமாக பங்களிக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெண்கள்தான் வாழ்க்கையை கொண்டு வருபவர்கள். ஒவ்வொரு பெண்ணும் அசாதாரணமானவள், அவள் எங்கு வேலை செய்தாலும், அது வீடாக இருந்தாலும் சரி, அலுவலகமாக இருந்தாலும் சரி.

அவர்கள் அவளைச் சுற்றியுள்ள உலகிற்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள், மிக முக்கியமாக, குழந்தைகளை வளர்ப்பதிலும் ஒரு வீட்டை உருவாக்குவதில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையில் வெற்றிபெறும் மற்றும் மற்ற பெண்கள் மற்றும் அவளைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையில் வெற்றியைக் கொண்டுவரும் பெண்களை கௌரவிப்பதும் பாராட்டுவதும் நமது பொறுப்பு.

மேலும், உலகின் ஒவ்வொரு மூலையிலும் இயக்கங்கள் மற்றும் சர்வதேச மகளிர் தின நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க உயர்வு மற்றும் உலகெங்கிலும் பெண்களை மையமாகக் கொண்ட பல நாட்கள் மற்றும் முன்முயற்சிகள் பெண்களை தாராளமயமாக்க தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

பாலின சமநிலையை உலகம் ஏற்றுக்கொள்ளும் ஒரு மகிழ்ச்சிகரமான வரலாற்றுக் காலத்தை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். இப்போது உலகம் அவர்கள் இல்லாததைக் கவனித்து அவர்களின் இருப்பைக் கொண்டாடுகிறது.

முடிவாக, பெண்களின் சாதனைகளைக் கொண்டாட ஒரு நாள் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எனவே, இந்த சர்வதேச மகளிர் தினத்தில், நம் வாழ்க்கையிலும் சமூகத்திலும்

பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, எதிர்கால சாதனைகளுக்கு அவர்களை ஊக்குவிப்போம். ஏனெனில் அவர்களால் வீடு, சமூகம் மற்றும் தேசத்திற்கு சமமாக பங்களிக்க முடியும்.

## பெண்ணின் பெருமை

**- க. புவனேஸ்வரி,** மாநில இணை செயலாளர்

சாதனைப் பெண்ணே சரித்திரம் படைக்கவா! பேதை என்பது கவிஞரின் எழுத்துப் பிழை! அதை மேதை என எழுதிடலாம் வா!

வெள்ளையனை வெளியேற்றி வீர முழக்கம் இட்டவர் ராணி வேலு நாச்சியார். வீரவாள் ஏந்தி வெற்றியை முரசு கொட்டியவர் ஜான்சி ராணி. கைலாயத்தை தன் கைகளால் கடந்து பக்தியில் சிகரம் தொட்டார் காரைக்கால் அம்மையார்.

பெண்ணை நிலவென்பர் அந்த நிலவே சுற்றி வந்தவர் பெண் கல்பனா சாவ்லா.

பளுதூக்கி ஒலிம்பிக்கில் நம் பாரத பெருமையை மீட்டார் கர்ணம் மல்லேஸ்வரி இப்படி வீரமாய் பக்தியாய் சாதனையாய் சரித்திரமாய் ஆண்டாண்டு காலமாய் வீற்றிருப்பது பெண்மை.

பெண்மையை போற்றுவோம் கொண்டாடுவோம்.

சாதனைகளோடு சரித்திரம் படைக்க கடவுளால் படைக்கப்பட்ட கற்ப விருட்சம் தான் பெண்கள்.

ஒரு துளி உதிரத்தை கூட உருவம் செய்து குழந்தை தருபவள் பெண்.

தோள் கொடுக்கும் தோழியாய் வளம் சேர்க்கும் மனைவியாய் அறிவுரைக்கும் அன்னையாய் பரிந்துரைக்கும் மருமகளாய் குடும்ப தலைவியாய் பாசம் கொடுக்கும் சகோதரியாய் வலம் வரும் நீ வயது பல ஆனாலும் வலது கரமாய் திகழ்வது பெண்ணே.

கருதனில் மங்கையராய் பிறந்துவயிற்றில் குழந்தைகளை சுமந்து மார்பில் தலைவனை தாலாட்டியே முதுகில் குடும்ப சுமைகளை தாங்கும் மங்கையே நான்கு வேதங்கள் சொல்லாததை பெண்ணே உன் கருவறை கற்றுக் கொடுக்கிறது வாழ்க்கையில்.

இன்பத்தை கருவாக்கினால் பெண் உலகத்தில் மனிதரை உருவாக்கினால் பெண் விண்ணவர்க்கும் மன்னவருக்கும் விலையற்ற செல்வம் பெண்ணே.

மாதத்திற்கு மூன்று நாள் மரணத்தோடு போராடும் மாதர் குல திலகமே வீர நடை போட்டு பல சாதனைகளை படைக்கவா.

அனைவருக்கும் இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்.

## உலக மகளிர் தினம் தோன்றிய வரலாறு

**- V. சிவராணி,** மாநில செயலாளர்

1789ம் பாரிஸ் நகர லூயிபிலிப் மன்னருக்கு எதிராக பிரெஞ்ச் புரட்சியில் தொழிலாளர்களின் உரிமை காக்க ஆண்களோடு சேர்ந்து பெண்களும் மன்னர் ஆட்சிக்கு எதிராக போராடினார்கள்.

அம்மன்னரால் போராட்டக் கூட்டத்தை அடக்க முடியாமல் போனது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த லூயிப் பிளாங்க் என்ற மன்னர் 1848 இல் பெண்களுக்கும் உரிமைகள் வழங்கப்படும் என்றும், அரசியலிலும் பெண்களுக்கு பங்களிப்பு அளிக்கப்படும் என்பதையும் அறிவித்தார்கள்.

ரஷ்ய புரட்சியின் போது தொழிலாளர்களின் உரிமை காக்கும் போராட்ட களத்தில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டதால் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படும் என்று அறிவித்த அந்த நாளை தான் மார்ச் 8 உலக மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பெண்களின் சம உரிமை மற்றும் பெண்களின் மதிப்பை உலக மக்கள் எல்லோரும் உணர்ந்து மதிப்பளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அமெரிக்க சோசியலிஸ்ட் கட்சியின் ஆதரவோடு கி.பி. 1909ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் நாள் உலக மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டது. அதன் பின் கி.பி. 1917 க்கு பிறகு உலக மகளிர் அமைப்புகள் ஒன்று சேர்ந்து மார்ச் 8 அன்றைய தினத்தை உலக மகளிர் தினமாக கட்டமைத்தனர்.

**சமுதாயத்தில் மகளிர் ஒரு பார்வை**

பெண்கள் அழகு நிறைந்தவள் அன்பானவள் அமைதியானவள் பேரானந்தம் தருபவள். அது மட்டுமல்ல பெண் என்பவள் வீரமும் நிறைந்தவள். தற்காலத்தில் மட்டுமல்ல அவள் காலந்தொட்டு சமுதாயத்தில் பெண் என்பவள் ஒரு போதைப் பொருளாகவும் அவள் மற்றவர்களுக்காக மட்டுமே என்ற பொதுவான நிலை தான் உள்ளது.

பெண்ணிடம் அழகு மட்டுமல்ல வீரமும் ஒளிந்திருக்கிறது. வீட்டுக்காகவும் நாட்டுக்காகவும் உழைக்கும் பெண்களை காலம்காலமாக சமுதாயத்தில் காணகிறோம். ஆண்களை விட பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை மெய்பிக்கும் வகையில் சமுதாயத்தில் பெண்கள் போராடி வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்மை இல்லாமல் உலகத்தில் உயிர்கள் உருவாக வாய்ப்பே இல்லை. பெண்மைதான் உலக மக்கள் உருவாக காரணம் உலகத்தில் பாதிப் பேர் ஆண்கள் மீதி பாதிப்பேர் பெண்கள் அந்த பாதி ஆண்களையும் பெற்று எடுத்தது பெண்களே. அப்படிப்பட்ட பெண் இனத்தை பாதுகாக்கவே ஆண் இனம் தோற்றுவிக்கப்பட்டது.

பெண் எல்லா சூழ்நிலைகளிலும் ஒத்திசைவாக இசைந்து வாழக்கூடியவர்கள். மகளாக, சகோதரியாக, தாரமாக, தாயாக இப்படி ஆண்மைக்கு ஒத்திசைவாக வாழ கற்றுக் கொண்டவர்கள். ஆனால் பெண்களின் இந்த பண்பை பயன்படுத்திக் கொண்ட ஆண் மக்கள் தங்களுக்கு சாதகமாக அடக்கு முறையாகவும், அடிமைத்தனமாகவும் மாற்றிக் கொண்டது ஏனோ?

பெண் என்பவள் உடல் மட்டுமல்ல. அவள் மூளையாகவும் செயல்படுகிறாள். அதனால் தான் என்னவோ பெண் புத்தி பின் புத்தி என்றுபெரியவர்கள் சொன்னார்களோ? அதன் அர்த்தம் ஒரு செயலை செய்வதால் அதனால் வரும் பின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து உணர்ந்து செயல்படுபவள் பெண்.

அடுத்த வீட்டுக்கு ஆக்கி போடுற பொம்பளைக்கு படிப்பு எதற்கு என்று ஏளனமாக பேசியவர்கள் எல்லாம் இன்று வாயை பிளந்து பார்க்கும் அளவிற்கு பெண் சமுதாயத்தில் எல்லா துறைகளிலும் விண்ணுயர்ந்து இருக்கிறார்கள் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அவளுக்கு மட்டுமல்ல அவளை சுற்றி இருக்கும் சமுதாயத்திற்கும் பொருந்தும்.

எல்லாருக்கும் எல்லா சூழ்நிலையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனால் பெண் எல்லா சூழ்நிலைகளிலும் வாழ கற்றுக் கொடுக்கப்படுகிறாள் பழகவும் செய்கிறாள். அப்படிப்பட்ட பெண் இனத்தை பாதுகாக்கும் பொறுப்பும் வலிமையும் ஆண் மகனிடம் தான் உள்ளது. ஆனால் வேலியே பயிரை மேய்வது போல் பாதுகாப்பு செய்யும் இடத்தில் இருந்து கொண்டு பெண்களை வன்கொடுமை செய்வதும் பாலியல் துன்புறுத்தல் செய்வதும் அந்த ஆண்மகன் தான். வன்கொடுமையும் பாலியல் துன்புறுதல்களும் இன்றைய சமுதாயத்தில் மிக சாதாரணமாக நடந்து கொண்டு உள்ளது.

பெண் எப்பொழுதும் அவளுக்காக வாழ்வதே இல்லை. ஒன்று குடும்பத்திற்காக மற்றொன்று நாட்டிற்காக. இப்படித்தான் பெண்களின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

பெண்ணின் பெருமை உணர்ந்தவர்கள் தான் பெண் விடுதலைக்காகவும் பெண் சுதந்திரத்திற்காகவும் போராடினார்கள்.

பெண் சுதந்திரம் என்பது ஏனோ அவளை அவள் இஷ்டம் போல் சுதந்திரமாக எல்லா இடங்களுக்கும் எல்லா செயல்களையும் செய்ய வைப்பது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியல்ல பெண் சுதந்திரம்.

பெண் செய்ய நினைப்பதையெல்லாம் செய்வது அல்ல பெண் சுதந்திரம். பெண் செய்ய விரும்பாததையும் செய்யாமல் இருப்பதுதான் பெண் சுதந்திரம் என்கிறார் மகாத்மா காந்தி.

பெண்கள் இல்லாத துறையே இல்லை இருந்த போதும் எல்லா துறைகளிலும் (இன்றைய ஆன்மீகம்) பெண்களுக்கு எதிரான வன்கொடுமையும் பாலியல் துன்புறுத்தல்களும் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது கண்காட்சியில் பெண்கள் பாலியல் துன்புறுத்தலின் போது அணிந்திருந்த உடைகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அவை தாவணி,சுடிதார், சேலை, சல்வார் கம்மீஸ், ஜீன்ஸ் என பல உடைகள் இருந்தன. அவற்றில் ஒன்று டைப்ர் இவற்றைப் பார்க்கும்போது மனம் சுக்கு நூறாகிப் போனது என்று சமீபத்தில் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இவற்றையெல்லாம் ஒரு தனி மனிதனால் சரிப்படுத்த முடியாது. ஒட்டுமொத்த சமுதாயமும் உணர்ந்துதான் சரியான முறையில் வழிநடத்தி பெண்மையின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் உணர்த்த வேண்டும்.

அது சரி பெண்மையின் மதிப்பை ஆண்மகன் மட்டும் உணர்ந்தால் போதுமா? போதாது. பெண்களும் பெண்மையின் மதிப்பை உணர்ந்து அதற்கு தகுந்தாற் போல் சமுதாயத்தில் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு பண்பாட்டு கல்வி அவசியம் வேண்டும்.

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்மா என்ற கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் வாக்கியத்திற்கிணங்க பெண்ணாய் பிறப்பதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும். அதனால் தான் பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆண்மகனுக்கு மகளாய், சகோதிரியாய், தாரமாய், தாயாய் பல உறவுகளில் அவர்களோடு பயணிக்கிறோம்.

பெண் கண்ணியம் நிறைந்தவள். கண்ணியத்திற்கு இடையூறு நேர்ந்தால் துர்காவாகவும், ஆதிபராசக்தியாகவும் தன் தோற்றத்தை காட்டவும் தயங்கமாட்டாள் பெண்.

நாமே நம்மை பாதுகாத்துக் கொள்வோம். கண்ணியம் காப்போம்.

அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்.

# கோவை மண்டல கூட்டம்

**- ஆ. கண்ணாதுரை**, மாநில துணைத் தலைவர், TNEBEF

**த**மிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில பொதுக்குழுவில் (14, 15 & 16.12.2024) நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், மின்சார சட்டத் திருத்தத்தினால் அகில இந்திய அளவில் நடைபெற்று வரும் போராட்ட இயக்கங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைபெறும் பதவிகளை மறுபகிர்வு (Re-deployment) பாதிப்புகள், ஸ்மார்ட் மீட்டர் திட்டம் குறித்து மதிப்புக்குரிய பொது செயலாளர் அ. சேக்கிழார் அவர்கள் விரிவான சிறப்புரையாற்றிய விளக்க கூட்டம் 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கோவை சங்க மனையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கோவை மண்டல செயலாளர் திரு. A. முருகவேல் அவர்கள் தலைமை தாங்கினார். மாநில இணைச் செயலாளர் திருமதி. M. கவிதா அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று புகழப்படும் கோவை மண்டலம் தொழிற்சங்க பணிகளில் என்றும் முன்னிற்கும் என்பதை அனைவரும் அறிவர். மாநில பொதுக்குழுவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில தலைமை நிர்வாகிகளை அழைத்து சிறப்பிக்கும் கூட்டத்தை முதலாவதாக நடத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. கோவை தெற்கு, வடக்கு, மாநகர், G.C.C., P&C., திருப்பூர், பல்லடம், உடுமலை, உடுமலை NCES, நீலகிரி மற்றும் குந்தா, காடம்பாறை, எமரால்டு நீர் மின்உற்பத்தி வட்ட கிளைகள் சேர்ந்து மிகச் சிறப்புடன் நடத்தினர். மாநில, கிளை, கோட்ட திரளாக வந்து கலந்து கொண்டனர்.

பொதுச்செயலாளருடன், கொங்கு மண்ணில் தொழிற்சங்க வழிகாட்டியாக திகழும் மதிப்புக்குரிய J.L. பாஸ்டின்ராஜ் அவர்க்ள மாநில தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது. கோவைக்கு கிடைத்த பெருமையாக கொண்டோம். அவர்களுடன் அன்புக்குரிய மாநில துணை பொதுச்செயலாளர் திரு. K. நாராயணமூர்த்தி, மாநில பொருளாளர் திரு. N. பழனி, மாநில அமைப்பு செயலாளர் திரு. G.K. பாலகிருஷ்ணன் ஆகியோர் வருகை தந்து உரையாற்றி சிறப்பித்தனர்.

முன்னதாக UTUC-யுடன் இணைந்த தமிழ்நாடு அரசு ரேஷன் கடைப் பணியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் தோழர் G. ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 50 பேருக்குமேல் வந்து UTUC அகில இந்திய செயலாளர் தோழர் அ. சேக்கிழார் அவர்களுக்கு கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்தினர். அவருடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்திற்குப் பின்தொடர்ந்து நமது மண்டல கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எம்ப்ளாயீஸ் பெடரஷேனோடு இணைந்து செயல்படும் TNEBREOS ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கத்தின் துணை பொதுச்செயலாளர் திரு. R. சக்திவேல் அவர்களின் தொடர் முன்னெடுப்பின் காரணமாக சுமார் 600 உறுப்பினர்கள் கொண்ட பொள்ளாச்சி கிளையின் இணைப்பு விழா நடத்த திட்டமிட்டு வருகை தந்த அதன் நிர்வாகிகள் திருவாளர்கள் K. மயில்சாமி, K. கோதண்டம், D.M. தண்டபாணி, G. ராஜசேகரன் ஆகியோருக்கு வரவேற்பளித்து பொதுச்செயலாளர் அவர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டது.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில துணைத் தலைவர் திருவாளர்கள் ஆ. கண்ணாதுரை, R. சக்திவேல், S. மோகன், E. சக்திவேல், மாநில செயலாளர்கள் S. சதீஷ்சங்கர், G. அங்குராஜ், திருமதி. M. பாரதி, மாநில இணை செயலாளர்கள் A. காதர் இப்ராகீம், K. துரைராஜ், D. சாமுவேல் ஜான்சன், M. ராஜேந்திரன், K.P. சீனிவாசன், கிளை செயலாளர்கள் I. லியோபால், S. கந்தசாமி, M. காமாட்சிமுருகன், A. ஹரிதாஸ், R. ரைசன் டேவிட்குமார் ஆகியோர் பேசினர். கூட்டம் சிறப்புடன் நடைபெற கோவை மண்டல கிளைகளின் நிர்வாகிகள் உழைப்பும் பங்களிப்பும் மெச்சத்தக்கது. சுவையான மதிய உணவுடன் விருந்தோம்பல் எண்பது கொங்கு மண்ணின் உணர்வில் கலந்தது என்பதை காட்டினர்.

திருமதி. R. யோகசித்ரா இணை செயலாளர் கோவை வடக்கு கிளை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் பகல் 2.00 மணியளவில் இனிதே நிறைவுற்றது.